(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 121.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 செத்தெம்பர் 08, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0596/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 10 வருடங்களுக்கான,

(i) அரசாங்கத்தின் மொத்த உண்மையான செலவினையும் (நிகர பொருளாதாரப் புரள்வு),

(ii) நேரடி மற்றும் மறைமுக வரிகள் மூலமாக ஈட்டபட்ட அரசாங்கத்தின் வருமானத்தினை வெவ்வேறாகவும்,

(iii) அரசாங்கத்தின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினையும்,

(iv) நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினையும்,

(v) அரசாங்கத்தின் வரவுவெலவுத் திட்டப் பற்றாக்குறையையும்

வருடாந்த அடிப்படையில் அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை ஈடுசெய்ய எங்கிருந்து நிதி பெறப்பட்டது என்பதையும் அதற்காகப் பெறப்பட்ட கடன்களுக்கான வட்டிக் கிரயத்தையும்,

(ii) இந்த வாழ்க்கை முறைக்கு ஈடுகொடுக்க முடியுமா என்பதையும், நாடு கடன் பொறியினை நோக்கிச் செல்கின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1050/ '10

2.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய கண்டி மாவட்டத்தின் கட்டுகஸ்தொட்டை, கம்பளை, தெல்தெனியா, வத்தேகம, தெனுவர மற்றும் கண்டி ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 61 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1119/ '11

3.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தென் மாகாண அரச பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் பாடசாலை பற்சிகிச்சை நிலையங்களில் பௌதிக மற்றும் மனித வளங்களில் கடும் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சிறுவர் பற்சுகாதாரத்தைப் பேணுவதற்கு மேற்குறிப்பிட்ட பற்சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான பௌதிக மற்றும் மனித வளங்களை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்காக தேவைப்படும் காலம் யாதென்பதையும்;

(iii) இதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1182/ '11

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (I) அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு இற்றை வரை வருகைதந்துள்ள சர்வதேச கப்பல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(II) மேற்படி கப்பல்கள் அத் துறைமுகத்துக்கு வருகைதந்துள்ள திகதிகள் மற்றும் நாடுகள் யாவையென்பதையும்;

(III) அந்த ஒவ்வொரு கப்பல் மூலமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெயர்களையும் அப் பொருட்களின் நிறையையும் (தொன்களில்) தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (I) அம்பாந்தோட்டை துறைமுகம் ஊடாக இந் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள பொருட்கள் யாவையென்பதையும்;

(II) தற்போது அத் துறைமுகத்திலிருந்து பொருட்களை ஏற்றிச் சென்றுள்ள கப்பல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

1259/ '11

5\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0598/ '10

6\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அடுத்த 8 வருடங்களில் எதிர்பார்க்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியினையும்,

(ii) இற்றை வரையிலான கடந்த 8 வருடங்களுக்கான தலா வருமானத்தை வருடவாரியாகவும்,

(iii) இற்றை வரையிலான கடந்த 8 வருடங்களுக்கான தலா கடன் சுமையை வருடவாரியாகவும்

(iv) 01.01.1994, 01.01.2005, 01.08.2010 ஆகிய திகதிகளில் உள்ளவாறு, தலா ஈட்டல்களினதும் கடனினதும் பெறுமதியினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1120/ '11

7\.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தர்மாச்சார்ய பரீட்சையில் சித்தியடைந்து தற்போது தஹம் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு அரசாங்க ஆசிரியர் நியமனம் வழங்குதல் தொடர்பாக இரண்டு அமைச்சரவை நிருபங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனா என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்களுக்கு 2600 ஆவது சம்புத்த ஜயந்தி ஆண்டுக்குள் அரசாங்க ஆசிரியர் நியமனங்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது?

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1183/ '11

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான மொனராகல தோட்டத்திலுள்ள இறப்பர் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மேற்படி தோட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற இறப்பர் பால் எந்த நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்றது என்பதையும்;

(iv) இந்நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஓர் அலகுக்கு (கிலோ அல்லது லீற்றர்) செலுத்தப்படுகின்ற பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) இறப்பர் பால் அலகொன்றின் தற்போதைய சந்தை விலை என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட தொழிற்சாலை மற்றும் அதற்கு சொந்தமான தோட்டத்தை விற்பதற்கு அல்லது குத்தகைக்கு விடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1260/ '11

9.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1615/ '11

10.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இஹலகம கட்டுகலியாவில் வசிக்கும் திரு டபிள்யு. அன்வர் சீப்புக்குளம் கால்நடை வளர்ப்பு பயிற்சி நிலையத்தில் 2000.08.15 ஆம் திகதியிலிருந்து 2001.04.30 ஆம் திகதி வரை அமைய தொழிலாளியாக சேவையாற்றியுள்ளார் என்பதையும்;

(ii) 255 நாட்கள் தொடர்ச்சியாக திருப்திகரமான முறையில் சேவையாற்றிக் கொண்டிருந்த இவருடைய சேவையை நிரந்தரமாக்குவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தவறியுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு அன்வரை மீண்டும் சேவையில் அமர்த்தி, மேற்படி பதவிக்கு நியமித்து, 180 நாள் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளமையை கருத்தில் கொண்டு, ஏற்புடைய பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமைய, இவரது சேவையை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1121/ '11

11.

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் ஓமந்த கிராம அலுவலர் பிரிவையும், வலல்லாவிட்ட பிரதேச செயலாளர் பிரிவின் 787 D தொடஹ கிராம அலுவலர் பிரிவையும் இணைத்து, பெந்தர கங்கை ஊடாக ஓமந்த இறங்கு துறையை நிர்மாணிப்பதற்காக 1999 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டு பதினொரு வருடங்களுக்கும் அதிக காலம் கடந்துள்ளதென்பதையும்;

(ii) இதுவரை அதன் நிர்மாணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) இதனால் பிரதேசத்தின் அதிக எண்ணிக்கையான மக்களுக்கு கிடைக்க வேண்டிய பயன்கள் இழக்கப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(III) அவ்வாறாயின் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(IV) பாலத்தின் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1184/ '11

12\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிரந்தர இராணுவ சேவையிலுள்ள இராணுவ உத்தியோகத்தர்களையும் படைவீரர்களையும் சேவையிலிருந்து நீக்குவதற்கான ஒரு வேலைத்திட்டம் நடைமுறைத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வடிப்படையில் என்பதையும்;

(iii) இராணுவ சேவையை விட்டுச் சென்றதன் பின்னர் மீண்டும் இராணுவத்தில் இணைந்த படைவீரர்களுக்கு தண்டனை வழங்கும் முகமாக இவர்களை இராணுவத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், இவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் நட்டஈடு அல்லது சிறப்புரிமைகள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இராணுவ சேவையை விட்டுச் சென்ற இராணுவ வீரர்களை மீண்டும் இராணுவ சேவையில் இணைத்துக்கொள்ளும் போது வழங்கப்பட்டுள்ள தண்டனைகளுக்கு மேலதிகமாக மீண்டும் தண்டனை வழங்கும் நோக்கில் இராணுவ சேவையிலிருந்து நீக்கப்படுதல் பாரிய அநீதியாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

1186/ '11

13\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் மண் சரிவுகள் ஏற்படுவதில் ஓர் அச்சமூட்டும் போக்கு காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) பாதுகாப்பற்ற இடங்களாக குறிப்பிடப்படுகின்ற மிகப் பாதிக்கப்பட்ட இடங்கள் எவை என்பதையும்;

(iii) இப் பாரதூரமான விடயம் குறித்து அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (I) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நாட்டில் மண் சரிவின் காரணமாக இறந்த ஆட்களின் எண்ணிக்கை தனித்தனியாவும்;

(II) இறந்த ஆட்கள் சார்பாக அரசாங்கத்தால் கொடையளிக்கப்பட்ட மானியங்களின் தொகையையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1261/ '11

14.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1617/ '11

15.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தர்கா நகர், காதியாவத்தை வீதி, 88 ஆம் இலக்க இடத்தில் வதியும் திருமதி எஸ்.எஸ். பரீதா இலங்கை ஆசிரியர் சேவையின் 1 ஆம் வகுப்பு, ஓய்வுபெற்ற (ஓய்வு இலக்கம் 112550708) ஒரு ஆசிரியர் என்பதையும்;

(ii) 2004.03.01 திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 1 ஆம் வகுப்பிற்கு பதவியுயர்வு பெற்றபோதிலும், இந்தப் பதவியுயர்விற்கு அமைவாக ஓய்வூதியமோ மேற்படி பதவியில் அமர்த்தப்பட்ட திகதி தொடக்கம் உரித்தாக வேண்டிய நிலுவைச் சம்பளமோ இவருக்கு இதுவரையும் பெற்றுக்கொடுப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், திருமதி பரீதாவுக்கு உரித்தாக வேண்டிய நிலுவைச் சம்பளம் உட்பட திருத்தியமைக்கபட்ட ஓய்வூதியத்தை தாமதமின்றி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்கள்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (திருத்தம்),— 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பணம் தூய்தாக்கல் தடை (திருத்தம்),— 2006ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தம்),— 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நீதி அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

சுற்றாடல் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 32 (2) (ஏ) ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2009 நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 1627/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

கரையோரம் பேணல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 4.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 யூன் மாதம் 29 ஆந் திகதிய 1660/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதிய 1646/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதிய 1646/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.4),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதிய 1589/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.5),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 1617/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.6),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிய 1694/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 11.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 12.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 22.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

24.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

25.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**